**கோவை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய துணை இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணைகள்**

முன்னிலை:திருமதி.ஜோதிமணி Msc B.Ed.M.A
துணை இயக்குநர்
இருப்பு: மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம் கோவை

**செயல்முறை ஆணை எண்:அ1/356/2020 நாள்.10/08/2020**

பொருள்:பணியமைப்பு- திரு.எஸ்.வினோாத்குமார் இளநிலை உதவியாளர் ,மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் கோவை - கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டமை - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை - அரசாணை மற்றும் மூல ஆவணங்கள் பெறப்பட்டமை - ஒப்புதல் அளித்தல்- தொட்பாக

பார்வை: 1. ஆணையர்,வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை கிண்டி, சென்னை அவர்களின் குறிப்பாணை எண் நிர்2/15569/2015 நாள் 12.04.2018
2.துணை இயக்குநர் ,மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் , கோவை அவர்களது செயல்முறை ஆணை எண் அ1/3728/2015 நாள் 13.04.2018
3.இயக்குநர்,வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை கிண்டி, சென்னை அவர்களின் குறிப்பாணை எண் நிர்2/15569/2015 நாள் 17.02.2020
4.அரசாணை (3டி) எண் 11 ,தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை( என்2) நாள் 28.05.2020
5.இயக்குநர்,வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை கிண்டி, சென்னை அவர்களின் குறிப்பாணை எண் நிர்2/15569/2015 நாள் 18.06.2020

---

**ஆணை:**

கோவை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திருமதி.ஆர்.விஜயலட்சுமி, 02.03.2015 அன்று மருத்துவ காரணங்களின் அடிப்படையில் பணி இயலாமையின் காரணமாக ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ,அவரது மகன் திரு.எஸ்.வினோத்குமார், தற்காலிக இளநிலை உதவியாளராக கோவை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பணியமர்த்தம் செய்யப்பட்டு, பார்வை 2 ல் காணும் கோவை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய துணை இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணையின் வாயிலாக ,கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு,18.04.2018 அன்று முற்பகல் இளநிலை உதவியாளராக கோவை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பணியில் சேர்ந்துள்ளார்.

Scanned by Scanner Go

பார்வை 4 ல் காணும் அரசாணையின் வாயிலாக, திரு.எஸ்.வினோத்குமார்,இளநிலை உதவியாளர் அவர்களது பணியினை, தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் 18.04.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 18.04.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இப்பணியாளர் தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிக்காண் பருவகாலமாக கருதப்படும். தகுதிகாண் பருவ காலத்தில் இவர் திருப்திகரமாக பணியாற்ற வேண்டும். இக்காலகட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுகளில் இவர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இச்செயல்முறை ஆணையினைப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்பதல் அளித்திடல் வேண்டும்.

துணை இயக்குநர்
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்
கோவை 29

பெறுநர்
திரு.சௌ.வினோத்குமார்
இளநிலை உதவியாளர்
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்
கோவை 29

நகல்:
பணிப்பதிவேடு.

Scanned by Scanner Go